அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

## 2024/2025

# தமிழ்

## ஆண்டு 6

நேரம்: 120 மணித்துளிகள்

நாள்: சனிக்கிழமை

மொத்தப்புள்ளிகள்: 100
(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

பக்கங்கள்: 12

சுட்டெண் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

## பகுதி 1 - எழுதுதல்

### 1 மிகப்பொருத்தமான விடையின் முன் உள்ள கூட்டினுள் புள்ளடி இடுக.

1. இன்ப துன்ப உணர்ச்சிகளைச் சொற்களால் இணைத்து எழுதுவது
   - ☐ ஓவியம்
   - ☐ இலக்கணம்
   - ☐ கவிதைகள்

2. அ, இ, உ ஆகிய எழுத்துகள்
   - ☐ நெட்டெழுத்துகள்
   - ☐ சுட்டெழுத்துகள்
   - ☐ மெய்யெழுத்துகள்

3. குளிர்மை என்பதன் ஒத்தபொருள்
   - ☐ மனம்
   - ☐ தண்மை
   - ☐ வாவி

4. நுண்கலைகளுள் ஒன்று
   - ☐ கும்மி
   - ☐ ஓவியம்
   - ☐ கோலாட்டம்

5. வல்லின மெய்யெழுத்துகள் என்பது
   - ☐ க்,ச்,ட்,த்,ப்,ற்
   - ☐ ய்,ர்,ல்,வ்,ழ்,ள்
   - ☐ ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்

6. பல பொருள்களைக் குறிப்பது
   - ☐ ஒருமை
   - ☐ பன்மை
   - ☐ ஒரு பொருள்

7. உறவினர்களை அழைக்கும் முறை
   - ☐ உறவுமுறை
   - ☐ தலைமுறை
   - ☐ வழிமுறை

8. பயனிலையோடு யார்? எது? எவை? என வினவும் போது வருவது
   - ☐ எழுவாய்
   - ☐ அடைமொழி
   - ☐ செயப்படுபொருள்

9. ஒற்றுமை என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   - ☐ வேற்றுமை
   - ☐ எளிமை
   - ☐ ஒருமை

10. இலையின் புதிதாகத் தோன்றிய நிலை
    - ☐ பழுப்பு
    - ☐ தளிர்
    - ☐ கொழுந்து

11. சினைப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு
    - ☐ சதுரம்
    - ☐ காய்
    - ☐ காலை

12. மாமரம், பெரிய, குதிரை என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
    - ☐ மா
    - ☐ கோ
    - ☐ பார்

13. நுங்கு கிடைக்கப் பெறும் மரம்

- [ ] வேம்பு
- [ ] பனை
- [ ] தென்னை

14. ஆணைக் குறிக்கும் பால்

- [ ] ஆண்பால்
- [ ] பலர்பால்
- [ ] ஒன்றன்பால்

15. தலைவன் என்பதன் எதிர்ப்பாற் சொல்

- [ ] கணவன்
- [ ] மனைவி
- [ ] தலைவி

16. சேரர், சோழர், பாண்டியர் எனப்படுவோர்

- [ ] மூவேந்தர்
- [ ] மூவிடம்
- [ ] முக்காலம்

17. தங்கை நடனம் ஆடினாள். இச்சொல்லியத்தின் செயப்படுபொருள்

- [ ] தங்கை
- [ ] நடனம்
- [ ] ஆடினாள்

18. குற்றம் பார்க்கின் சுற்றம்

- [ ] இல்லை
- [ ] உண்டு
- [ ] இருக்கும்

19. சிரிக்கின்றாய் என்ற வினைச்சொல் காட்டும் இடம்

- [ ] தன்மை
- [ ] முன்னிலை
- [ ] படர்க்கை

20. பாக்கு நீரிணையை நீந்திக்கடக்கும் முயற்சியில் இறங்கியவர்

- [ ] எழிலன்
- [ ] நிலவன்
- [ ] ஆழிக்குமரன் ஆனந்தன்

20x1 = 20 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள சொற்களின் திணை, பால், எண் என்பவற்றை எழுதுக.

| | | திணை | பால் | எண் |
|---|---|---|---|---|
| 1. | சிறுமி | உயர்திணை | | |
| 2. | மான்குட்டி | | | |
| 3. | எழுதுகிறான் | | ஆண்பால் | |
| 4. | இருந்தன | | | |

10 x1 = 10 புள்ளிகள்

## 3 பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து இடைவெளியில் எழுதுக.

| | | |
|---|---|---|
| தாமரை | அம்மாவை | நடனம் |
| காய்கறிகள் | காட்டில் | |

1. நான் ____________________க் கூப்பிட்டேன்.
2. காலையில் ____________________ மலர்ந்தது.
3. கயல்விழி அழகாக ____________________ஆடினாள்.
4. வணிகன் அங்காடியில் ____________________விற்பான்.
5. ஓநாய் ____________________வாழும்.

5x2 = 10 புள்ளிகள்

## 4 தரப்பட்டுள்ள சொற்களை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

| | |
|---|---|
| 1. நண்பன் | 1. |
| 2. மான் | 2. |
| 3. மெழுகுதிரி | 3. |
| 4. அஞ்சல் | 4. |
| 5. விளையாட்டு | 5. |

5x2 = 10 புள்ளிகள்

## 5 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தமிழரது தனித்தன்மையான அடையாளங்களுள் இரண்டை எழுதுக.

2. முற்காலத்தில் வாய்மொழிப் பாடல்களாக இருந்தவை எவை?

3. உயர்திணைக்குரிய பால்களுள் இரண்டை எழுதுக.

4. ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

   தன்மை: ______

   படர்க்கை: ______

5. உறவுமுறைப் பெயர்களுள் இரண்டை எழுதுக?

6. பூவின் விரியத் தொடங்கும் நிலையின் பெயர் என்ன?

7. கவியின்பத்தில் கூறப்படும் ‘தமிழன் கனவு’ என்னும் பாடலைப் பாடியவர் யார்?

5x2 = 10 புள்ளிகள்

## 6 பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

ஆல மரத்து ஊஞ்சலாம்
அமர்ந்து ஆடிப் பாடலாம்
காலை உயர நீட்டியே
கீழும் மேலும் ஆடலாம்.

விண்ணை நோக்கிப் போகலாம்
வடக்குத் தெற்குப் பார்க்கலாம்
பண் இசைத்துப் பாடலாம்
பகல் முழுதும் ஆடலாம்.

பழக்க மில்லாப் பிள்ளைகள்
பையப் பைய ஆடலாம்
பழக்கமான போதிலே
பறந்து விண்ணில் ஆடலாம்.

- சாரணா கையூம்

1. ஊஞ்சல் எந்த மரத்தில் உள்ளது?

2. பையப் பைய ஆடுபவர்கள் யாவர்?

3. காலை என்ன செய்து ஆடலாம்?

4. எதை நோக்கிப் போகலாம்?

5. எதை இசைத்துப் பாடலாம்?

5x2 = 10 புள்ளிகள்

## 7 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 75 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. உறவைப் பேணுவோம்
2. ஆழிக்குமரன் ஆனந்தன்
3. தைப்பொங்கல்

    உள்ளடக்கக் குறிப்புகள்:

    - கொண்டாடுவதற்கான காரணம்
    - கொண்டாடும் காலம்
    - அன்று செய்பவை

4. விலங்ககம்

    உள்ளடக்கக் குறிப்புகள்:

    - சென்ற இடம்
    - பார்த்த விலங்குகள்
    - கண்டு மகிழ்ந்த காட்சிகள்

15 புள்ளிகள்

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

நாம் நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாக்க உடற்பயிற்சி தேவைப்படுகின்றது. உடலுக்கும் உடல் உறுப்புகளுக்கும் உடற்பயிற்சி தேவையானது. நடத்தல், ஓடுதல், நீந்துதல், விளையாடுதல் போன்றன நாம் நாளும் செய்யும் உடற்பயிற்சிகளுள் சிலவாகும். குழந்தைகள் முதல் பெரியோர் வரை நோயின்றி வாழ இன்றி அமையாதது உடற்பயிற்சி. உடற்பயிற்சியால் குருதி ஓட்டம் சீராக இருக்கும். மூளையின் செயற்பாடுகள் நன்றாக இயங்கும் மாணவர்களின் மன அழுத்தத்தைக் குறைத்து தன்னம்பிக்கைக்கு வழிவகுக்கும். கல்விக்கூடங்களிலும் மொழி, கலை, அறிவியல் போன்று உடற்பயிற்சிப் பாடத்திலும் அதிக கவனம் கொள்கிறார்கள். மாணவர்கள் தனியாகவும் குழுக்களாகவும் இயங்குவார்கள். இதனால் ஒற்றுமை வளரும்.

1. நாம் நோயில் இருந்து பாதுகாக்க எது தேவைப்படுகிறது?

2. உடற்பயிற்சி எவற்றுக்குத் தேவையானது?

3. நாம் தினமும் செய்யும் உடற்பயிற்சிகள் எவை?

4. உடற்பயிற்சியால் மாணவர்களுக்கு ஏற்படும் நன்மைகள் எவை ?

5. கல்விக்கூடங்களில் மாணவர்கள் எப்படி இயங்குவார்கள்?

5x2 = 10 புள்ளிகள்

**2. தரப்பட்டுள்ள அஞ்சலை வாசித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் அடையாளம் இடுக.**

கைதடி வீதி,
யாழ்ப்பாணம்.
07.10.2024

அன்பு நண்பி அருவிக்கு,
வணக்கம். எனது பள்ளியின் பத்தாவது ஆண்டுவிழா மிகச்சிறப்பாக நடக்க இருக்கிறது; மாணவர்களின் வில்லுப்பாட்டு, பட்டிமன்றம், கவியரங்கம் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. அதில் எனது நிகழ்வுகளும் இருப்பதால் உன்னையும் அன்போடு அழைக்கின்றேன்.

காலம்: 08.02.2025 சனிக்கிழமை
இடம்: பள்ளிமண்டபம்

இப்படிக்கு,
அன்பு நண்பி
கோதை

1. இது ஓர் அஞ்சல். ( )

2. ஆண்டுவிழா நடைபெறும் நாள் ஞாயிற்றுக்கிழமை. ( )

3. இதில் கவியரங்கமும் இடம்பெறும். ( )

4. இது இருபதாவது ஆண்டுவிழா. ( )

5. அருவியின் நண்பி கோதை. ( )

5x1 = 5 புள்ளிகள்

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 20 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |